





# மதுரை மணி


Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்





| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 221 | உள்ளூர் - 09.08.2026 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 221 | வெளியூர் - 10.08.2026 | திங்கட்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |


**திருமண வாழ்க்கைக்கு ஏற்ற ராசிகள்?** | **எஸ்பிஐ வங்கியில் 1,538 காலியிடங்கள்!** | **தமிழகத்தில் மதுபானங்கள் விலை உயர்வு?** | **பள்ளிகளுக்கு கல்வித்துறை அதிரடி உத்தரவு!**

## வெள்ளையனே வெளியேறு இயக்க தினம்: போராட்டத்தில் பங்கேற்றவர்களை நினைவுகூர்ந்த பிரதமர் மோடி!



புதுடெல்லி, ஆக. 09–

வெள்ளையனே வெளியேறு போராட்ட தினத்தில் பங்கேற்றவர்கள் குறித்து பிரதமர் மோடி நினைவு கூர்ந்தார்.

இதுதொடர்பாக பிரதமர் மோடி எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில் கூறியுள்ளதாவது:

வரலாற்றுச் சிறப்புமிக்க 'வெள்ளையனே வெளியேறு' போராட்டத்தில் பங்கேற்ற அனைவரையும் நினைவு கூர்கிறோம். அவர்களின் துணிச்சல் ஒவ்வொரு இந்தியருக்கும் என்றும் ஓர் உத்வேகமாகத் திகழும்.

மகாத்மா காந்தியின் தலைமையால் ஈர்க்கப்பட்டு, 'வெள்ளையனே வெளியேறு' என்ற அந்த முழக்கம் நமது விடுதலைப் போராட்டத்திற்குப் புதிய ஆற்றலை ஊட்டியது. அத்துடன், காலனித்துவ ஆட்சியிலிருந்து விடுபடுவதற்கான நமது மக்களின் அசைக்க முடியாத உறுதியையும் அது வெளிப்படுத்தியது' என பதிவிட்டுள்ளார்.

இதேபோல், உள்துறை மந்திரி அமித்ஷா வெளியிட்டுள்ள பதிவில், வெள்ளையனே வெளியேறு இயக்கம் நமது சுதந்திரப் போராட்டத்தின் வரலாற்று அத்தியாயமாகும், இது நாட்டு மக்களை ஒருங்கிணைத்து, ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்து விடுதலை பெற செய் அல்லது செத்து மடி என்ற உறுதியையும், துணிவையும் அவர்களுக்கு வழங்கியது. தேசத்தின் விடுதலைக்காக இந்த மாபெரும் போராட்டத்தில் அனைத்தையும் தியாகம் செய்த சுதந்திரப் போராளிகள் அனைவருக்கும் தலைவணங்குகிறேன் என தெரிவித்துள்ளார்.

## புதுச்சேரி காவல்துறைக்கு ஜனாதிபதியின் வண்ணக்கொடி விருது: அமித்ஷா வழங்கினார்!



புதுச்சேரி, ஆக. 09–

கோரிமேடு போலீஸ் மைதானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய மந்திரி அமித்ஷா கலந்து கொண்டு புதுவை காவல்துறைக்கு 'ஜனாதிபதியின் வண்ணக்கொடி' விருதை வழங்கினார். ஜனாதிபதியின் வண்ணக்கொடி விருது என்பது இந்தியாவின் முப்படைகள், துணை ராணுவப் படைகள் அல்லது மாநிலக் காவல்துறை பிரிவுகளுக்கு அவற்றின் சிறப்பான நீண்டகாலச் சேவை, அர்ப்பணிப்பு மற்றும் ஒழுக்கத்தைப் பாராட்டி ஜனாதிபதியால் வழங்கப்படும் மிக உயரிய கவுரவமாகும்.

விழாவில் அமித்ஷா பேசியதாவது:–

கொரோனா பெருந்தொற்று காலத்தில் யூனியன் பிரதேசங்களில் தகவல்களை கேட்டபோது, புதுச்சேரி காவல்துறை மக்களுக்கு சேவை செய்வதில் முதலிடத்தை பெற்றது என்பதை நான் இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன். ஏனென்றால் அந்த காலகட்டத்தில் சாகச நிறை மனதோடு பணி புரிந்திருக்கிறீர்கள்.

அச்சமின்றி துணிச்சலான மனதுடன் காவலர்கள் ஆற்றிய பணி போற்றுதலுக்குரியது. கடந்த 12 ஆண்டுகளாகவே பாரத பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வை யூனியன் பிரதேசம் மேம்பட வேண்டும் என்பதுதான். குறிப்பாக புதுச்சேரிக்கு பல்வேறு சிறப்பு முன்னெடுப்புகளும் திட்டங்களும் வழங்கி வருகிறது என்று கூறினார். தொடர்ந்து அங்கிருந்து புறப்பட்ட அவர் நேராக ராஜீவ்காந்தி சிலை சதுக்கத்தில் உள்ள அக்கார்டு ஒட்டலுக்கு சென்றார். அங்கு சிறிது நேர ஓய்வுக்கு பின் அவர் பகல் 12 மணி முதல் 1 மணி வரை கட்சியின் முக்கிய தலைவர்கள், அரசியல் கட்சியின் பிரமுகர்களை சந்தித்து ஆலோசனை நடத்த உள்ளார்.

## 80-வது சுதந்திர தினம்: விஜய் ஸ்பெஷல்!



சென்னை, ஆக. 09–

நாட்டின் 80–வது சுதந்திர தினம் வரும் ஆகஸ்ட் 15–ம் தேதி கொண்டாடப்பட உள்ளது.

இதையொட்டி சென்னை புனித ஜார்ஜ் கோட்டை கொத்தளத்தில் நடைபெறும் விழாவில், முதல்–அமைச்சர் விஜய் முதல் முறையாக தேசியக் கொடியை ஏற்றுகிறார்.

முன்னதாக காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை அவர் ஏற்றுக்கொள்கிறார். தொடர்ந்து தமிழகத்துக்கும் தமிழின வளர்ச்சிக்கும் பங்காற்றியவர்களுக்கு 'தகைசால் தமிழர்' விருது உள்ளிட்ட பல்வேறு அரசு விருதுகளை வழங்கி கவுரவிக்க உள்ளார்.

1974–ம் ஆண்டு முதல் சுதந்திர தினத்தன்று மாநில முதல்வர்கள் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றி வருகின்றனர். அந்த வகையில், 7–வது முதல்வராக விஜய் தேசியக் கொடியை ஏற்றுகிறார் என செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சரத் பவார் கட்சியின் 8 எம்பிக்களும் பிரதமர் மோடியுடன் சந்திப்பு!



புதுடில்லி, ஆக. 09–

பார்லிமென்ட் முடங்கியுள்ள நிலையில், சரத் பவார் அணியைச் சேர்ந்த 8 எம்பிக்களும் நாளை (ஆகஸ்ட் 10) பிரதமர் மோடியை சந்திப்பார்கள் என சுப்ரியா சுலே உறுதிப்படுத்தினார். சுப்ரியா சுலே நிருபர்களிடம் கூறியதாவது:–

துரதிர்ஷ்டவசமாக, சபை செயல்படவில்லை. எங்கள் தொகுதிகளில் பல சவால்களும், பிரச்னைகளும் உள்ளன. அவற்றை எங்களால் எழுப்ப முடியவில்லை. அதனால்தான் எங்கள் 8 எம்பிக்களும் நாளை (ஆகஸ்ட் 10) காலை 11 மணிக்கு பார்லிமென்ட் அலுவலகத்தில் மஹாராஷ்டிரா மாநில பிரச்னைகள் குறித்து விவாதிக்க பிரதமரைச் சந்திக்கப் போகிறார்கள். நாங்கள் பிரதமரின் நேரத்தை அதிகாரப்பூர்வமாகக் கோரியுள்ளோம்.

இரு அவைகளிலும் தொடரும் முட்டுக்கட்டையால், முக்கிய மாநில அளவிலான பிரச்னைகளுக்குத் தீர்வு காணப்படாமல் உள்ளது தொகுதி மறுவரையறை மசோதா இன்னும் அறிமுகப்படுத்தப்படாததால், இது குறித்து கருத்து தெரிவிப்பது முன்கூட்டியே எடுக்கப்படும் முடிவாக இருக்கும். மசோதா தாக்கல் செய்யப்பட்டவுடன், கட்சி ஒருமித்த முடிவை எடுக்கும். ஒவ்வொரு மசோதாவையும் எங்கள் கூட்டணிக் கட்சிகளுடன் விவாதிப்போம். இவ்வாறு சுப்ரியா சுலே கூறினார்.

தேஜ கூட்டணியில் இணையப்போகிறீர்களா என்ற கேள்விக்கு சரத் பவார், சுப்ரியா சுலே இருவரும் வெளிப்படையாக பதில் அளிக்கவில்லை. எனினும், பார்லி கூட்டத்தொடரில், மகளிர் இட ஒதுக்கீடு மசோதா, தொகுதி மறு வரையறை மசோதா ஆகியவற்றில் மத்திய அரசுக்கு ஆதர வாக இக்கட்சியினர் செயல்படுவர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

## அமெரிக்காவின் கடன் சுமை!

# உலக நாடுகளுக்கு 'பார்சல்'? டாலர் ஆதிக்கத்தில் இந்தியா?

## ஏழை நாடுகளுக்கு பேராபத்து?



வாஷிங்டன், ஆக. 09–


ஒரு நாட்டின் கடன் அந்த நாட்டின் பிரச்சினையாக மட்டும் இருந்தால் அதை சமாளிப்பது எளிது. ஆனால், உலகின் முக்கிய நாணயமான அமெரிக்க டாலர் மூலம் அந்தக் கடன் உலக பொருளாதாரத்துக்குள் பரவினால், அதன் தாக்கம் பல நாடுகளையும் பாதிக்கக்கூடும். அமெரிக்கா தனது அதிகப்படியான கடன் பிரச்சினையை உலக நாடுகளுக்கு கொஞ்சம் கொஞ்சமாக பகிர்ந்து வருவதாக விமர்சனம் எழுந்துள்ளது. வெனிசுலா அதிகளவில் பணத்தை அச்சிட்டதால் பணவீக்கம் ஏற்பட்டு, நாணய மதிப்பு சரிந்து பொருளாதாரம் சீர்குலைந்தது. அமெரிக்காவிலும் இதுபோன்ற நிலை ஏற்பட்டால், அதன் தாக்கம் உலக நாடுகளுக்கும் பரவக்கூடும். அமெரிக்க அரசு தொடர்ந்து டாலர் பணப்புழக்கத்தை அதிகரித்து வரும் நிலையில், கருவூலப் பத்திரங்கள் மூலம் டாலருக்கான தேவையையும் உருவாக்குகிறது. இதனால் பணவீக்கத்தின் தாக்கம் உலக நாடுகளுக்கும் பகிரப்படும் சூழல் ஏற்படுகிறது. தங்கத்திற்கு அடுத்த முக்கிய நாணயமாகவும், பல நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்படும் நாணயமாகவும் டாலர் இருப்பதால் அதன் தேவை அதிகமாக உள்ளது.

கச்சா எண்ணெய், ஆயுத கொள்முதல் உள்ளிட்ட மிகப்பெரிய சர்வதேச பரிவர்த்தனைகள் டாலரில் நடைபெறுகின்றன. மேலும், நாணய மதிப்பை கட்டுப்படுத்தவும் பொருளாதார பாதுகாப்புக்காகவும் உலக நாடுகள் டாலரில் முதலீடு செய்கின்றன. போர் மற்றும் வரி விதிப்பு போன்ற சூழல்களிலும் டாலருக்கான தேவை அதிகரிக்கிறது.

இவ்வாறு டாலருக்கான தேவையை அமெரிக்கா உருவாக்கி, பொருளாதார வளர்ச்சியையும் பணவீக்கக் கட்டுப்பாட்டையும் தக்கவைக்க முயற்சிக்கிறது. டாலர் ஆதிக்கத்தை எதிர்த்து பிரிக்ஸ் நாடுகள் ஒன்றிணைந்தால், அமெரிக்கா வரி விதிப்புகள் மூலம் பொருளாதார அழுத்தம் கொடுக்கக்கூடும். அமெரிக்காவை எதிர்த்து நிற்கும் அளவுக்கு பல நாடுகளுக்கு பொருளாதார வலிமை இல்லாததால், டாலரை வாங்கும் நிலை தொடர்கிறது. சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் டாலர் ஆதிக்கத்தை எதிர்த்தாலும், அமெரிக்காவின் கடன் காரணமாக பணவீக்கம் அதிகரிக்கலாம். ஆனால், சொத்துகளின் மதிப்பு உயர்வதால் அதன் தாக்கம் அமெரிக்காவில் குறைவாக இருக்கலாம்.

இதனால் ஏழை நாடுகள் மேலும் ஏழைகளாகவும், பணக்கார நாடுகள் மேலும் பணக்காரர்களாகவும் மாறும் அபாயம் இருப்பதாக அக்ஷத் ஸ்ரீவஸ்தவா தெரிவித்துள்ளார். அதேவேளையில், பொருளாதாரம், தொழில்நுட்பம், வர்த்தகம் மற்றும் புதுமை மூலம் அமெரிக்கா தனது டாலர் ஆதிக்கத்தை தொடர்ந்து தக்க வைத்துள்ளது. கடந்த 5060 ஆண்டுகளாக அமெரிக்காவின் பொருளாதார ஆதிக்கம் நீடிப்பதால், அதன் முதலீட்டு சந்தை உலக முதலீட்டாளர்களின் முக்கிய இடமாக விளங்குகிறது. இந்த நிலையில், அமெரிக்காவின் கடன் சுமை மற்றும் டாலர் ஆதிக்கம் இந்தியா உள்ளிட்ட வளர்ந்து வரும் நாடுகளுக்கு எதிர்காலத்தில் முக்கிய பொருளாதார சவாலாக மாறுமா ?என்பதே கவனிக்க வேண்டிய கேள்வியாக உள்ளது.

## நிர்வாக வசதிக்காக த.வெ.க.வில் மேலும் 27 மாவட்டங்கள் உருவாக்கம்!




சென்னை, ஆக. 09–

த.வெ.க.வில் மேலும் 27 மாவட்டங்கள் உருவாக்கப்பட்டு உள்ளது. இதில் 2 அமைச்சர்களுக்கு மாவட்ட செயலாளர் பதவி கிடைத்துள்ளது.

.வெ.க. அமைப்பு ரீதியாக 128 மாவட்டங்களாக பிரிக்கப்பட்டு மாவட்ட செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் நியமிக்கப்பட்டனர். தற்போது நிர்வாக வசதிக்காக மேலும் 27 மாவட்டங்களை உருவாக்கி அதற்கு செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகளை த.வெ.க. தலைவரும், முதல்–அமைச்சருமான விஜய் நியமித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு:–

மாவட்ட செயலாளர்கள் பட்டியல்

1. விருதுநகர் மேற்கு – அமைச்சர் கீர்த்தனா,
2. மதுரை வடக்கு– கருப்பையா எம்.எல்.ஏ,
3. மதுரை மத்தியம்– வி.எம்.எஸ். முஸ்தபா எம்.எல்.ஏ.,
4. மதுரை கிழக்கு– கார்த்திகேயன் எம்.எல்.ஏ.,
5. புதுக்கோட்டை மேற்கு– முன்னாள் அமைச்சர் டாக்டர் விஜயபாஸ்கர்,
6. நாமக்கல் தென்கிழக்கு– சந்திரசேகர் எம்.எல்.ஏ.
7. தேனி வடகிழக்கு – சபரி ஐயங்கரன் எம்.எல்.ஏ.
8. தேனி தென்மேற்கு– ஜெகநாத் மிஸ்ரா எம்.எல்.ஏ.,
9. தூத்துக்குடி மத்தியம் – அமைச்சர் ஸ்ரீநாத்,
10. திருவள்ளூர் வடமேற்கு – டாக்டர் அருண்குமார் எம்.எல்.ஏ.,
11. திருப்பூர் தென்கிழக்கு – முன்னாள் எம்.எல்.ஏ. சத்யபாமா,
12. திருப்பத்தூர் தெற்கு– திருப்பதி எம்.எல்.ஏ.,
13. நெல்லை தெற்கு – டாக்டர் சதீஷ் கிறிஸ் டோபர் எம்.எல்.ஏ.,
14. நெல்லை கிழக்கு – முன்னாள் அமைச்சர் இசக்கி சுப்பையா,
15. திருச்சி புறநகர் தெற்கு– நவல்பட்டு விஜி எம்.எல்.ஏ.,
16. திண்டுக்கல் தென்மேற்கு – அய்யனார் எம்.எல்.ஏ.,
17. தர்மபுரி புறநகர் மேற்கு கஜேந்திரன் எம்.எல்.ஏ.,
18. சேலம் மத்திய மேற்கு லட்சுமணன் எம்.எல்.ஏ.,
19. சேலம் தெற்கு பழனிவேல் எம்.எல்.ஏ.,
20. சென்னை தெற்கு – அருள்பிரகாசம் எம்.எல்.ஏ.,
21. செங்கல்பட்டு வடக்கு – காமாட்சி எம்.எல்.ஏ.,
22. செங்கல்பட்டு கிழக்கு–தையூர் எஸ்.குமரவேல்,
23. கோவை கிழக்கு –ஸ்ரீ கிரி பிரசாத் எம்.எல்.ஏ.,
24. கிருஷ்ணகிரி தென்கிழக்கு –இளையராஜா,
25. கரூர் தெற்கு – சத்யா எம்.எல்.ஏ.,
26. ஈரோடு புறநகர் மேற்கு – முன்னாள் எம்.எல்.ஏ. ஜெயக்குமார்,
27. ஈரோடு புறநகர் கிழக்கு மாவட்டம்– சண்முகன் எம்.எல்.ஏ.

இவ்வாறு த.வெ.க. வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தலையங்கம்
மதுரை மணி
ஞாயிற்றுக்கிழமை 09.08.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆடி மாதம் 24-ம் தேதி

## ஏஐயால் வேலை போகல; இந்தியாவில் புதிய வேலை அதிகம்!



ஏஐ எனப்படும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் உலக ஐடி துறையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. ஏராளமான பணிகளை தானியங்கி முறையில் செய்ய முடிவதால், அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளில் டெக் நிறுவனங்கள் ஊழியர்களை பணிநீக்கம் செய்து வருகின்றன. ஆனால், இந்தியாவில் நிலைமை சற்று வித்தியாசமாக இருப்பதாக நோமுரா ஹோல்டிங்ஸ் ஆய்வு தெரிவித்துள்ளது.

2022 முதல் 2026 வரையிலான காலகட்டத்தில் இந்தியாவில் ஏஐ காரணமாக 31,921 ஊழியர்கள் பணிநீக்கம்செய்யப்பட்டுள்ளனர். அதே நேரத்தில், ஏஐ தொடர்பான பணிகளுக்கு 83,100 பேர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம், இழந்த வேலைவாய்ப்புகளைவிட சுமார் 2.5 மடங்கு அதிகமான புதிய வேலைகள் உருவாகியுள்ளன.

ஏஐ காரணமாக அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் சப்போர்ட் மற்றும் வாடிக்கையாளர் சேவை பிரிவுகளில் பணியாற்றுபவர்கள். சாட்பாட் மற்றும் ஆட்டோமேஷன் கருவிகள் பயன்பாடு அதிகரித்ததே இதற்கு முக்கிய காரணமாக கூறப்படுகிறது.

குறிப்பாக 0 முதல் 2 ஆண்டுகள் அனுபவமுள்ள பிரஷ்ஷர்களுக்கான வேலைவாய்ப்பு குறைந்துள்ளது. ஆனால், ஏஐ தொடர்பான திறன் கொண்ட அனுபவம் வாய்ந்த ஊழியர்களுக்கான தேவை அதிகரித்துள்ளது.

ஆசிய அளவில் 1,30,758 ஏஐ வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ள நிலையில், 60,654 பணிகள் நீக்கப்பட்டுள்ளன.இதில் உருவாக்கப்பட்ட வேலைகளில் 90 சதவீதம் தொழில்நுட்பத் துறையிலும், நீக்கப்பட்ட வேலைகளில் 60 சதவீதம் நிதித்துறையிலும் இருந்ததாக ஆய்வு தெரிவிக்கிறது.

## மின்சார அடுப்புகளின் பயன்பாட்டை ஊக்குவிக்க இறக்குமதி வரியை குறைக்க மத்திய அரசு பரிசீலனை!



புதுடெல்லி, ஆக. 09–

மேற்காசியாவில் நிலவும் போர் பதற்றம் காரணமாக, இந்தியாவின் சமையல் கியாஸ் (எல்.பி.ஜி.) இறக்குமதி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. நமது நாட்டில் ஆண்டுக்கு சுமார் 3 கோடியே 30 லட்சம் டன் எல்.பி.ஜி. தேவைப்படும் நிலையில், அதில் சுமார் 65 சதவீதம் அளவுக்கு வெளிநாடுகளில் இருந்து தான் இறக்குமதி செய்து வருகிறோம். இதில் 90 சதவீதம் மேற்காசிய நாடுகளில் இருந்தே பெறப்படுகிறது.

சில மாதங்களுக்கு முன்பு சமையல் கியாஸ் தட்டுப்பாடு தலைவிரித்தாடியதால் எண்ணெய் நிறுவனங்கள் சிலிண்டர்களை பெறுவதற்கு பொதுமக்களுக்கு அடுக்கடுக்கான பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்தன. வர்த்தக மற்றும் வீட்டு பயன்பாட்டுக்கு சிலிண்டர் கிடைக்காததால் பொதுமக்கள் கடும் சிரமத்தை சந்தித்தனர். சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டபோது பொதுமக்கள் அவசர நிலைமையை சமாளிக்க மின்சார அடுப்புகளை சமையல் செய்வதற்காக பயன்படுத்தினார்கள்.

கியாஸ் சிலிண்டர் மூலம் சமையல் செய்வதற்கு சிறந்த மாற்றாக மின்சார அடுப்புகள் இருக்கின்றன. இதில் சமையல் செய்வதற்கு ஆகும் செலவு, கியாஸ், விறகு அடுப்பு உள்ளிட்ட மற்ற சமையல் முறைகளை விடவும் மூன்றில் ஒரு பங்கு குறைவானது என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் சமையல் எரிவாயுவை சார்ந்திருக்கும் நிலையை குறைப்பதற்காக, மின்சார அடுப்புகளை பயன்படுத்துவதை ஊக்குவிக்க மத்திய அரசு புதிய திட்டங்களை வகுத்து வருகிறது.

இதற்காக மானியங்கள் வழங்குதல், உதிரி பாகங்களுக்கு இறக்குமதி வரியைக் குறைத்தல் மற்றும் மின் வினியோகக் கட்டமைப்பை மேம்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது. மின்சார அடுப்புகளின் முக்கிய உதிரி பாகங்களான கண்ணாடி, காயில் உள்பட சில பொருட்கள் தற்போது சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. இவற்றை உள்நாட்டிலேயே தயாரிக்க அரசு திட்டமிட்டுள்ளது.

இதுபோல மின்சார அடுப்புகளுக்கு தற்போது விதிக்கப்படும் ஜி.எஸ்.டி. வரியை 18 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாகக் குறைக்கவேண்டும் என்று கோரிக்கைகள் வைக்கப்பட்டுள்ளன. மின்சார அடுப்புகளை பயன்படுத்தும்போது வீடுகளின் மின்சுமை அதிகரிக்கும் என்பதால், மின் வினியோகக் கட்டமைப்பை வலுப்படுத்த வேண்டியது அவசியம் என்று மின் வினியோக நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. தற்போது இந்தியாவில் ஆண்டுக்கு சுமார் 1 கோடி அடுப்புகள் தயாரிக்கப்படும் நிலையில், வருங்காலங்களில் ஏற்படும் தேவையைக் கருத்தில்கொண்டு இதனை 2 கோடியாக உயர்த்த உற்பத்தியாளர்கள் இலக்கு வைத்துள்ளனர்.

## தமிழகத்தில் மதுபானங்கள் விலை உயர்வு?




சென்னை, ஆக. 09–

தமிழகத்தில் டாஸ்மாக் கடைகள் மூலம் மதுபானங்கள் விற்பனை செய்யப்படுகிறது. அரசுக்கு மதுபானங்கள் விற்பனை மூலம் வருவாய் அதிகம் கிடைத்து வருகிறது. இந்தநிலையில் த.வெ.க. அரசு மதுபான விற்பனையை ஒழுங்குபடுத்தவும், காலி மதுபாட்டில்களை அகற்றுதல் மற்றும் மறுசுழற்சி செய்வதில் ஏற்படும் பிரச்சினைகளை சரி செய்யவும், மதுவிலக்கு மற்றும் மறுவாழ்வு, மதுவால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்றவற்றுக்காக 'சுற்றுச்சூழல் மற்றும் சமூக நல வரி' எனும் புதிய வரி விதிப்பை கொண்டு வந்துள்ளது.

சட்டசபையில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் லோகேஷ் தமிழ்செல்வன், தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டம், 2006–ல் திருத்தம் செய்து மசோதாவை தாக்கல் செய்தார். இதில் மதுபானங்களின் விற்பனைக்கு கூடுதலாக 'சுற்றுச்சூழல் மற்றும் சமூக நல வரி' விதிக்க முடிவு செய்யப்பட்டு உள்ளது. இந்த வரி, ஒரு மதுப்பாட்டிலுக்கு அதிகபட்சம் ரூ.20 என நிர்ணயிக்கப்படும். இது ஏற்கனவே உள்ள வாட் வரிக்கு மேலாக வசூலிக்கப்படும். மதுபானத்தின் வகை, அளவு மற்றும் கொள்கலனின் அளவைப் பொறுத்து வரி விகிதம் மாறுபடும்.

இந்தத் திருத்தத்தின் மூலம், சட்டத்தில் புதிய பிரிவு 3 (ஏ) சேர்க்கப்படுகிறது. இதன்படி, தமிழகத்தில் மது பானம் விற்பனை செய்யும் ஒவ்வொரு வணிகர்களும், அரசு அறிவிக்கும் விற்பனை நிலையிலேயே இந்த வரியை செலுத்த வேண்டும். கவர்னரின் ஒப்புதல் பெறப்பட்டு, அரசு அறிவிக்கை வெளியிட்டதும் இந்த புதிய வரி அமலுக்கு வரும். இதன் மூலம் மதுபானங்கள் விலை உயரும். அதேநேரத்தில் டாஸ்மாக்கில் மதுபானங்கள் விலை உயராது என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டு வருகிறது. ஆனால் இந்த புதிய வரியால் டாஸ்மாக் மதுபானங்கள் விலை விரைவில் உயரலாம் என்ற நிலை உள்ளது.

## திருமண வாழ்க்கைக்கு ஏற்ற ராசிகள்?






ஜோதிட சாஸ்திரத்தில் ஒவ்வொரு ராசிக்கும் தனித்தனி குணநலன்கள் இருப்பதாக கூறப்படுகிறது. அந்த அடிப்படையில் சில ராசிகளுக்கு இடையே திருமணப் பொருத்தம் சிறப்பாக அமையும் என ஜோதிடத்தில் குறிப்பிடப்படுகிறது.

**மேஷம்:** கும்பம், சிம்மம், தனுசு ஆகிய ராசிகளுடன் நல்ல புரிதல் ஏற்பட வாய்ப்பு.

**ரிஷபம்:** கன்னி, கடகம், மகரம், விருச்சிகம் ஆகிய ராசிகள் சிறந்த துணையாக அமையலாம்.

**மிதுனம்:** கும்பம், துலாம் ஆகிய ராசிகளுடன் நல்ல ஒற்றுமை ஏற்படும்.

**கடகம்:** மீனம், விருச்சிகம் ஆகிய ராசிகளுடன் உணர்வுப்பூர்வமான பிணைப்பு வலுப்படும்.

**சிம்மம்:** மேஷம், தனுசு, சிம்மம் ஆகிய ராசிகளுடன் நல்ல பொருத்தம் அமையலாம்.

**கன்னி:** கடகம், விருச்சிகம், ரிஷபம், மகரம் ஆகிய ராசிகள் ஏற்ற துணையாக இருப்பார்கள்.

**துலாம்:** ரிஷபம், தனுசு, மீனம் ஆகிய ராசிகளுடன் நல்ல புரிதல் ஏற்படும்.

**விருச்சிகம்:** ரிஷபம், கடகம், மகரம், மீனம் ஆகிய ராசிகளுடன் திருமண வாழ்க்கை சிறப்பாக அமையலாம்.

**தனுசு:** மேஷம், சிம்மம், தனுசு ஆகிய ராசிகளுடன் நல்ல இணக்கம் ஏற்படும்.

**மகரம்:** கன்னி, ரிஷபம், மகரம் ஆகிய ராசிகள் சிறந்த துணையாக அமையலாம்.

**கும்பம்:** மிதுனம், துலாம், தனுசு ஆகிய ராசிகளுடன் நல்ல புரிதலும் மகிழ்ச்சியும் கிடைக்கலாம்.

**மீனம்:** கடகம், விருச்சிகம், ரிஷபம், மகரம் ஆகிய ராசிகளுடன் நல்ல திருமண வாழ்க்கை அமைய வாய்ப்பு.

**குறிப்பு:** இது பொதுவான ராசி அடிப்படையிலான ஜோதிடக் கருத்தாகும். திருமணப் பொருத்தத்தைத் தீர்மானிக்க இருவரின் முழுமையான ஜாதகத்தையும் பரிசீலிப்பது வழக்கம்.

## தனியார் மயமாகும் ராக்கெட் ஏவுதளம்!



டெல்லி, ஆக. 09–

தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப்பட்டினத்தில் அமையும் ராக்கெட் ஏவுதளம் தனியார் மயமாகிறது. இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோவுக்கு ஆந்திரா மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் மட்டுமே ராக்கெட் ஏவுதளம் அமைந்துள்ளது. அங்குதான் இந்தியாவின் செயற்கைக்கோள்கள் மற்றும் பல்வேறு உலக நாடுகளின் செயற்கைக்கோள் ஏவப்பட்டுள்ளன. பி.எஸ்.எல்.வி, ஜி.எஸ்.எல்.வி, போன்ற ராக்கெட்டுகளின் உதவியோடு விண்ணில் ஏவப்பட்டு வருகின்றன.

தற்போது நாட்டின் இரண்டாவது ஏவுதளத்திற்காக தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள குலசேகரப்பட்டினம் தேர்வு செய்யப்பட்டது. குலசேகரப்பட்டினத்தில் ரூ. 986 கோடியில் ஏவுதளம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2,233 ஏக்கரில் ராக்கெட் ஏவுதளம் அமைக்கும் பணிகளை ஒன்றிய அரசின் விண்வெளித்துறை மேற்கொண்டு வருகிறது. குலசேகரப்பட்டினத்தில் அமையும் ஏவுதளத்தை தனியாரிடம் ஒப்படைக்கும் பணிகளை ஒன்றிய அரசு தொடங்கியது.

ராக்கெட் ஏவுதளத்தை தனியாரிடம் வழங்க ஒன்றிய அரசின் இன்–ஸ்பேஸ் நிறுவனம் டெண்டர் கோரியது. குலசேகர ப்பட்டினம் ஏவுதளத்தில் இருந்து சிறிய ரக செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவ முடியும். நாட்டின் 2வது ராக்கெட் ஏவுதளம் தனியாருக்கு வழங்கப்பட இருப்பதால் விஞ்ஞானிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.



இராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ்.மங்கலம் ஊராட்சி ஒன்றியம், மணக்குடி ஊராட்சி, சுனாமி காலனி பகுதியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சிவகுரு பிரபாகரன் அடிப்படை வசதிகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்தார். கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திவ்யான்ஷீநிகம் உடன் இருந்தார்.

## அரசு விரைவு பஸ்களில் ரூ.10 குடிநீர் பாட்டில் விற்பனை மீண்டும் தொடக்கம்!




சென்னை, ஆக. 09–

பயணிகளின் நலன் மற்றும் வசதியை மேம்படுத்தும் நோக்கில், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் நீண்ட தூரப் பஸ்களில் பயணம் செய்யும் பயணிகளுக்கு தரமான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ், ரூ.10–க்கு "பயணி" குடிநீர் பாட்டில் வழங்கும் திட்டத்தை, போக்குவரத்துத்துறை அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன், அறிமுகம் செய்து வைத்தார்.

நீண்ட தூரப் பயணங்களின் போது, பயணிகளுக்கு தரமான சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை குறைந்த விலையில் எளிதில் கிடைக்க செய்யும் நோக்கில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே கடந்த 2013–ம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் 'அம்மா' குடிநீர் பாட்டில் (ஒரு லிட்டர்) ரூ.10–க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. அம்மா குடிநீர் முக்கிய பஸ் நிலையங்களிலும் விற்பனை செய்யப்பட்டது.

பின்னர், 2021 தி.மு.க. ஆட்சியின்போது இத்திட்டம் பல்வேறு காரணங்களுக்காக நிறுத்தப்பட்டது. இந்த நிலையில், தற்போது அரசு விரைவு பஸ்களில் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 'பயணி' குடிநீர் பாட்டிலுக்கு பொதுமக்களிடம் கிடைக்கும் வரவேற்பை பொறுத்து முக்கிய பஸ் நிலையங்களிலும் விற்பனை செய்யும் வகையில் விரிவாக்கம் செய்யப்படும் என்று போக்குவரத்துத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ஆவின் பாலுக்கு கடும் தட்டுப்பாடு!




சென்னை, ஆக. 09–

சென்னையில் ஆவின் பாலுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதாக வாடிக்கையாளர்கள் புகார் தெரிவித்துள்ளனர். சென்னையில் கடந்த ஒரு மாதமாக ஆவின் பால் தட்டுப்பாடு நீடிக்கிறது. கடைகளுக்கு ஆவின் பால் விநியோகம் கணிசமாக குறைக்கப்பட்டுள்ளதால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. முன்பு ஒரு கடைக்கு 32 பெட்டிகள் ஆவின் பால் வழங்கப்பட்ட நிலையில் தற்போது 20 பெட்டிகள் வழங்கப்படுகிறது. காலை நேரத்திலேயே பல கடைகளில் ஆவின் பால் கிடைப்பதில்லை என பொதுமக்கள் வேதனை தெரிவித்துள்ளனர். அண்மைக் காலமாக ஆவின் பாலின் தரம் குறைந்து வருவதாகவும் பெண்கள் குற்றம் சாட்டியுள்ளனர். சென்னையில் இரண்டு மாதமாக பச்சை நிற பால் பாக்கெட்டுக்கு தட்டுப்பாடு அதிகரித்து வருகிறது.

## அசாமில் நீடிக்கும் கனமழை: பலி 99 ஆக உயர்வு!



அசாம், ஆக. 09–

அசாம் மாநிலம் தொடர்ந்து கடுமையான வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் ஆயிரக்கணக்கான மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. பல மாவட்டங்களில் கிராமங்கள், சாலைகள் மற்றும் தாழ்வான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. ஆக. 08 நிலவரப்படி, மேலும் ஒருவர் உயிரிழந்ததைத் தொடர்ந்து மொத்த பலி எண்ணிக்கை 99–ஆக உயர்ந்துள்ளது. மேலும் 1.47 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அதிகாரப்பூர்வ அறிக்கை தெரிவிக்கிறது. அசாம் மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் (ASDMA) தகவலின்படி, 12 மாவட்டங்களில் உள்ள ஒரு வருவாய் வட்டத்திற்கு உட்பட்ட 460 கிராமங்களில் மொத்தம் 1,47,376 பேர் தற்போது வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு சோனிட்பூர், நாகோன், கோலாகாட், சிவசாகர், ஹோஜாய், தர்ராங், ஜோர்ஹாட், தேமாஜி, சாரெய்டியோ, கர்பி அங்லாங், லக்கிம்பூர் மற்றும் பிஸ்வநாத் ஆகிய 12 மாவட்டங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் கூறுகிறது. பாதிக்கப்பட்ட மக்கள் தொகை 1,47,376 ஆக இருந்தது, 61,735 பேர் தொடர்ந்து வெள்ளத்தில் தத்தளித்து வருவதால் கோலாகாட் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.

கனமழையை தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளத்தால் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் மோசமான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. சுமார் 2 வாரங்களாக ரெயில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர். வெள்ளம் பாதித்த பகுதியில் உள்ள மக்கள் அங்கிருந்து மீட்கப்பட்டு மாநிலம் முழுவதும் உள்ள சுமார் 133 நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மாநில அரசு சார்பில் தொடர்ந்து மீட்பு மற்றும் நிவாரண பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## தமிழ்நாடு முழுவதும் ஆக.14-ல் அதிமுக ஆர்ப்பாட்டம்!



சென்னை, ஆக. 09–

தவெக அரசைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் வரும் ஆகஸ்ட் 14ஆம் தேதி அதிமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார். தஞ்சையில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் எடப்பாடி பழனிசாமி பங்கேற்கிறார். மேகதாது விவகாரத்தில் தவெக அரசு மெத்தனம் காட்டுவதாகவும், விவசாயிகள் பெற்ற பயிர்க்கடனை முழுமையாகத் தள்ளுபடி செய்யாமல் தவெக அரசு வஞ்சிக்கிறது என தெரிவித்தார்.

## துபாயில் புதிய வாடகை விதிகள்: இந்தியர்கள் உஷார்!



துபாய், ஆக. 09–

துபாயில் ஆகஸ்ட் 26 முதல் shared housing, co–living, bedspace மற்றும் subletting விதிகள் கடுமையாக்கப்படுகின்றன.

வாடகைக்கு எடுத்த வீட்டில், வீட்டு உரிமையாளரின் அனுமதியின்றி மற்றவர்களை தங்க வைத்து வாடகை வசூலிக்க தடை விதிக்கப்படுகிறது. கூடுதல் நபர்களை தங்க வைக்க உரிமையாளரின் ஒப்புதல் அவசியம்.

அபார்ட்மெண்ட், வில்லா உள்ளிட்ட shared housing–க்கு துபாய் நகராட்சியின் அனுமதியும் உரிமமும் பெற வேண்டும். கட்டிட பாதுகாப்பு, வீட்டில் தங்குபவர்களின் எண்ணிக்கை, ஒருவருக்கான குறைந்தபட்ச இடம் உள்ளிட்ட விதிகளும் கடுமையாக்கப்பட்டுள்ளன. உரிமம் பொதுவாக ஒரு ஆண்டுக்கு வழங்கப்படும்; புதுப்பிக்க 30 நாட்களுக்கு முன்பு விண்ணப்பிக்க வேண்டும். விதிகளை மீறி subletting செய்தால் 500 முதல் 5 லட்சம் திர்ஹாம் வரை அபராதம், தொடர்ந்து மீறினால் 10 லட்சம் திர்ஹாம் வரை அபராதம் விதிக்கப்படலாம். வாடகை வீட்டில் வசிக்கும் இந்தியர்கள், புதிய விதிகள் அமலுக்கு வரும் முன் வீட்டு உரிமையாளரிடம் ஒப்பந்தத்தை சரிபார்த்துக் கொள்வது அவசியம்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



# மார்பக புற்றுநோய் அபாயத்தை குறைக்க முடியுமா?




பெண்களை அதிகம் பாதிக்கும் புற்றுநோய்களில் மார்பக புற்றுநோயும் ஒன்றாகும். உலகம் முழுவதும் இதன் பாதிப்பு அதிகரித்து வரும் நிலையில், இந்தியாவிலும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. மார்பகத்தில் உள்ள செல்கள் கட்டுப்பாடின்றி வளரும்போது கட்டி அல்லது புற்றுநோய் உருவாகலாம். வயது, மரபணு காரணங்கள், குடும்ப வரலாறு போன்றவற்றை மாற்ற முடியாவிட்டாலும், ஆரோக்கியமான வாழ்க்கை முறையின் மூலம் இதன் அபாயத்தை ஓரளவு குறைக்க முடியும் என மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.


வயது அதிகரிப்பு, உடல் பருமன், குடும்பத்தில் மார்பக புற்றுநோய் இருப்பது, BRCA1 மற்றும் BRCA2 மரபணு மாற்றங்கள், மது அருந்துதல், உடற்பயிற்சி இல்லாத வாழ்க்கை முறை ஆகியவை அபாயத்தை அதிகரிக்கக்கூடும். முதல் குழந்தை பெறுவதில் தாமதம், குழந்தை பெறாமல் இருப்பது, மாதவிடாய் நிறுத்தத்திற்குப் பிறகு சில வகையான ஹார்மோன் சிகிச்சைகளை நீண்ட காலம் எடுத்துக்கொள்வதும் சில பெண்களுக்கு அபாயத்தை அதிகரிக்கலாம்.

உடல் எடையை சரியாக பராமரித்தல், தினசரி உடற்பயிற்சி, மது அருந்துவதை தவிர்த்தல் அல்லது குறைத்தல், பழங்கள், காய்கறிகள், முழு தானியங்கள் போன்ற சத்தான உணவுகளை எடுத்துக்கொள்வது உதவியாக இருக்கும். குழந்தைக்கு தாய்ப்பால் கொடுப்பதும் சில பெண்களுக்கு மார்பக புற்றுநோய் அபாயத்தை குறைக்க உதவக்கூடும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

மாதவிடாய் நிறுத்தத்திற்குப் பிறகு ஹார்மோன் சிகிச்சை தேவைப்பட்டால், அதன் நன்மை, பாதிப்புகள் குறித்து மருத்துவரிடம் ஆலோசனை பெறுவது அவசியம்.

மார்பகத்தில் திடீரென கட்டி தோன்றுதல், அளவு அல்லது வடிவத்தில் மாற்றம், தோலில் பள்ளம் அல்லது சுருக்கம், காம்பில் மாற்றம், ரத்தம் கலந்த திரவம் வெளியேறுதல், நீண்ட நாட்களாக சிவத்தல் அல்லது வலி போன்ற அறிகுறிகளை அலட்சியம் செய்யக்கூடாது. இவை அனைத்தும் புற்றுநோய் என்று அர்த்தமில்லை என்றாலும், மருத்துவரிடம் பரிசோதனை செய்வது அவசியம்.

மார்பக புற்றுநோயை முழுமையாகத் தடுக்க முடியாது என்றாலும், ஆரோக்கியமான உணவு, உடற்பயிற்சி, சரியான உடல் எடை, வழக்கமான மருத்துவ பரிசோதனை ஆகியவற்றின் மூலம் அபாயத்தை குறைக்க முடியும். ஆரம்ப நிலையிலேயே கண்டறிவது சிகிச்சையின் வெற்றிக்கான வாய்ப்பை அதிகரிக்கும் என்பதால், பெண்கள் உடலில் ஏற்படும் சிறிய மாற்றங்களையும் கவனித்து செயல்படுவது முக்கியம்.



## சினிமா துளிகள்..!

### பிரைட் நடிகருக்கு எதிராக மாஸ் நடிகரை வைத்து திட்டம் போட்ட ஹைட் நடிகர்.. தலை தப்புமா?



சமீபத்தில் மாஸ் நடிகர் படத்துக்கு எதிராக டாப் நடிகர் ரசிகர்கள் கூட அமைதி காத்து நட்பு கரத்தை நீட்டினர். ஆனால், பிரைட் நடிகர் ரசிகர்கள் தங்களுக்கு பல ஆண்டுகள் கழித்து கிடைத்த ஒரு வெற்றியை வைத்து ஓவராக மாஸ் நடிகர் ஃபேன்ஸை ட்ரோல் செய்தனர்.

இந்நிலையில், பிரைட் நடிகர் படத்துக்கு எதிராக மாஸ் நடிகர் ரசிகர்களை கொம்பு சீவி விடும் வேலையை ஹைட் நடிகர் பக்காவாக பார்த்து தன்னுடைய படத்தை காப்பாற்ற இந்த போட்டியில் நாம சிக்கினோம் என்றால் தலை தப்பாது என ஏற்கனவே நம்பர் நடிகை தெறித்து ஓடிய நிலையில், தற்போது யாருடைய தலை மாட்டிக்கொண்டு முழிக்கப்போகிறது என்கிற கேள்வி கோடம்பாக்கத்தில் கிளம்பியுள்ளது.

பிரைட் நடிகருக்கு செக் வைக்க: மாஸ் நடிகர் தரப்பு ஹைட் நடிகரை கொம்பு சீவிவிட்டு பிரைட் நடிகருக்கு எதிராக செக் வைக்க திட்டமிட்டுள்ளதாக ஒரு தரப்பும் மாஸ் நடிகர் மற்றும் பிரைட் நடிகர் ரசிகர்களிடையே நிலவும் சண்டையை பயன்படுத்தி சந்துல புகுந்து கல்லா கட்டலாம் என ஹைட் நடிகரே பக்கா பிளான் போட்டு இறங்கியுள்ளார் என்று இன்னொரு தரப்பும் கிசுகிசுக்களை கட்டவிழ்த்து வருகின்றன.

ஹைட் நடிகர் பேக்கப் மாஸ் நடிகர் தானா?: ஹைட் நடிகர் படத்தை மாஸ் நடிகரின் நட்பு நடிகர் தான் தயாரித்துள்ள நிலையில், மாஸ் நடிகரின் மொத்த மாஃபியாவும் களமிறங்கி பிரைட் நடிகருக்கு எதிராக பக்காவான வேலையை பார்க்கப் போகிறது என்றும் பகீர் கிளப்புகின்றனர். அந்த தைரியத்தில் தான் பிரைட் நடிகரை எதிர்த்து ஹைட் நடிகர் நேரடி போட்டியில் ஈடுபடுகிறார் என்றும் அடித்துக் கூறுகின்றனர்.

# தமிழக அரசின் 100 நாட்கள் சாதனை பட்டியல்; அனைத்து துறைகளும் தயாரிக்க உத்தரவு..!



சென்னை, ஆக. 09–

த.வெ.க. அரசு பொறுப்பேற்று 100 நாட்களை எட்ட உள்ள நிலையில், அனைத்து துறைகளிலும் கடந்த 100 நாட்களில் மேற்கொள்ளப்பட்ட சாதனைப் பட்டியலைத் தயாரிக்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. அந்தந்த துறை அதிகாரிகள் இந்தப் பட்டியலை தயார் செய்து வருகின்றனர். விரைவில் இந்த சாதனைகள் குறித்த விரிவான அறிவிப்பு வெளியாகும் என்று தலைமைச்செயலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். லஞ்சமில்லாத மற்றும் பெண்களுக்கு முழுப்பாதுகாப்பான முன்மாதிரி தமிழ் நாட்டை உருவாக்குவதே த.வெ.க. அரசின் நோக்கமாக உள்ளது.

# மதுரை மாநகரில் போக்குவரத்து மாற்றம்!




மதுரை, ஆக. 09–

மதுரை மாநகரில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக போலீசார் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

மதுரை கரிமேடு போக்குவரத்து காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள அம்மா பாலமானது மிகவும் குறுகியதாக இருப்பதால் இப்பாலத்தில் அடிக்கடி போக்குவரத்து இடையூறு ஏற்படுகிறது. இதனை தவிர்க்க பாலத்தின் இருபக்கங்களிலும் உள்ள நுழைவுவாயில் பகுதியை அகலப்படுத்த மாநில நெடுஞ்சாலைதுறையினர் திட்டமிட்டு பணிகள் மேற்கொள்ள இருக்கிறது. இதனால் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் சிரமமின்றி செல்வதற்காக இலகுவான போக்குவரத்தினை ஏற்படுத்தும் வகையில் போக்குவரத்து மாற்றங்கள் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி, ஆரப்பாளையம் ஜல்லிக்கட்டு ரவுண்டானாவில் இருந்து அம்மா பாலம், கே.வி.சாலை வழியாக தத்தனேரி ரோடு செல்லும்.

அனைத்து வாகன போக்குவரத்தும் முற்றிலும் தடை செய்யப்படுகிறது. வாகனங்கள் அனைத்தும் ஆரப்பாளையம் ரவுண்டானா, வைகை தென்கரை சாலை வழியாக குரு தியேட்டா சந்திப்பிற்கு சென்று திரும்பி காமராஜர் பாலம், பாத்திமா காலேஜ் ரவுண்டானா சென்று வலதுபுறம் திரும்பி கே.வி. சாலை மற்றும் தத்தனேரி சாலை வழியாக செல்ல வேண்டும். கே.வி.சாலையில் இருந்து அம்மா பாலம் வழியாக ஆரப்பாளையம் ஜல்லிக்கட்டு ரவுண்டானாவிற்கு ஒரு வழிப்பாதையில் செல்ல இருசக்கர மற்றும் இலகுரக நான்கு சக்கர வாகனங்களுக்கு மட்டும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அரசு, தனியார் பஸ்கள், கனரக வாகனங்கள் செல்ல முற்றிலும் தடை செய்யப்படுகிறது. இந்த வாகனங்கள் அனைத்தும் கே.வி. சாலையிலிருந்து பாத்திமா கல்லூரி சந்திப்பிற்கு சென்று இடதுபுறம் திரும்பி குரு தியேட்டர் சந்திப்பிற்கு சென்று டி.டி. ரோடு வழியாக ஆரப்பாளையம் பஸ் நிலையம் செல்லலாம்.

மேலும், குரு தியேட்டர் சந்திப்பிலிருந்து இதர சாலைகளுக்கு செல்லும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அருள்தாஸ்புரம் சந்திப்பிலிருந்து தத்தனேரி பாலம் வரை ஒருவழிப்பாதையாக தற்காலிகமாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எனவே, அந்த சந்திப்பிலிருந்து தத்தனேரி பாலத்திற்கு வழக்கம் போல் அனைத்து வாகனங்களும் செல்லாம். தத்தனேரி பாலத்திலிருந்து அருள்தாஸ்புரம் சந்திப்பிற்கு எந்த வாகனமும் செல்வதற்கு அனுமதி இல்லை.

இந்த வாகனங்கள் அனைத்தும் தத்தனேரி பாலத்தில் இடதுபுறம் திரும்பி வைகை வடகரை சாலை வழியாக அருள்தாஸ்புரம் சந்திப்பிற்கு சென்று இடதுபுறம் திரும்பி இ.எஸ்.ஐ. மருத்துவமனை சாலை வழியாக பாத்திமா கல்லூரி சந்திப்பு சென்று இதர சாலைகளுக்கு செல்லும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. பழங்காநத்தம் காளவாசல் பைபாஸ் சாலையிலிருந்து குரு தியேட்டர் சப்வே, வைகை தென்கரை சாலை, அம்மா பாலம், கே.வி. சாலை வழியாக தத்தனேரி ரோடு செல்லும் அனைத்து வாகன போக்குவரத்தும் முற்றிலும் தடை செய்யப்பட்டுகிறது. இந்த தற்காலிக போக்குவரத்து மாற்றமானது இன்று முதல் சோதனை அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டு நாளை முதல் அமல்படுத்தப்பட உள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# காங்கிரஸூடன் கைகோர்க்கும் தமாகா?




சென்னை, ஆக. 09–

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் சென்னையில் நடை பெற்றது. இதில் பேசிய ஜி.கே.வாசன், காவிரி விவகாரத்தில் உச்சநீதிமன்றத்தை நாடிய தமிழக அரசின் முடிவு சரியானதுஎன்றார். மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பில் தமிழக உரிமைகளை விட்டுக்கொடுக்கக் கூடாது என்றும், இதுதொடர்பாக அனைத்துக் கட்சி எம்.பி.க்கள் கூட்டத்தை கூட்டிய தமிழக அரசின் நடவடிக்கை பாரா ட்டத்தக்கது என்றும் தெரிவித்தார். மேலும், தமிழக மக்களின் நலன் கருதி காங்கிரஸ் கட்சியுடன் தமாகா இணைந்து செயல்படத் தொடங்கியுள்ளது. உள்ளாட்சித் தேர்தல் நெருங்கும் நேரத்தில் கூட்டணி தொடர்பான அறிவிப்பு வெளியிடப்படும் என ஜி.கே.வாசன் தெரிவித்தார்.

# பள்ளிகளுக்கு கல்வித்துறை அதிரடி உத்தரவு!




சென்னை, ஆக. 09–

தமிழகத்தில் அனைத்து பள்ளிகளிலும் வரும் ஆகஸ்ட் 15–ம் தேதி சுதந்திர தின விழாவை சிறப்பாக கொண்டாட பள்ளிக்கல்வித் துறை அறிவுறுத்தியுள்ளது. பள்ளி வளாகங்களை அலங்கரித்து, தேசியக் கொடியேற்றி விழாவை நடத்த வேண்டும். பெற்றோர் ஆசிரியர் கழக உறுப்பினர்கள், புரவலர்கள், சுதந்திரப் போராட்ட தியாகிகளை விழாவில் பங்கேற்க அழைக்க வேண்டும்.

மேலும், பிளாஸ்டிக் தேசியக் கொடிகளை பயன்படுத்தக்கூடாது. தலைகீழான அல்லது கிழிந்த கொடிகளை ஏற்றக்கூடாது என பள்ளிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# குடற்புழு நீக்க மாத்திரை முகாம்!




சென்னை, ஆக. 09–

தேசிய குடற்புழு நீக்க நாளையொட்டி, தமிழகம் முழுவதும் நாளை (ஆக.10) சிறப்பு முகாம்கள்நடைபெறுகின்றன.

அங்கன்வாடி மையங்கள், துணை சுகாதார நிலையங்கள், பள்ளிகளில் காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரைகுடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கப்பட உள்ளன.

1 முதல் 19 வயது வரையிலான குழந்தைகள் மற்றும் இளைஞர்கள், 20 முதல் 30 வயதுடைய பெண்கள் என சுமார் 2.58 கோடி பேருக்கு அல்பெண்டசோல் மாத்திரைகள் வழங்கப்பட உள்ளன. முகாமில் விடுபட்டவர்களுக்கு ஆக.17–ம் தேதி மீண்டும் மாத்திரைகள் வழங்கப்படும் என சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.




தமிழக இயற்கை வளங்கள் அமைச்சர் டாக்டர் டி.கே. பிரபு நுண்திறன் வகுப்பறை கட்டிடம் மற்றும் கணினிகளை திறந்து வைத்து உரையாற்றுகிறார்.



சிறப்பு விருந்தினர்களுக்கு பொன்னாடை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

# ஆத்தங்குடியில் கல்வி சேவைக்கு புதிய அத்தியாயம்!

## நுண்திறன் வகுப்பறை, கணினி வழங்கி சிறப்பித்த விழா

ஆத்தங்குத்யில் செட்டிநாட்டரசர் குடும்பத்தின் நம்பிக்கை நட்சத்திரம் ஏ.ஆர். இராமசாமி அவர்களின் 92-வது பிறந்தநாளை முன்னிட்டு, அரசு உதவிபெறும் நேரு நடுநிலைப் பள்ளியில் நுண்திறன் வகுப்பறை கட்டிடம் மற்றும் கணினிகள் வழங்கும் விழா பிரமாண்டமாக நடைபெற்றது.

தமிழக இயற்கை வளங்கள் அமைச்சர் மாண்புமிகு டாக்டர் டி.கே. பிரபு, புதிய கட்டிடத்தையும் கணினிகளையும் திறந்து வைத்து சிறப்பித்தார்.

மாணவ, மாணவிகளுக்கு அதிநவீன சைக்கிள்களும் வழங்கப்பட்டன.

### மனிதத்தேனி ரா.சொக்கலிங்கம் உரை!

- . .ஆர்.ஆரின் மென்மையான செயல்பாடுகள், கல்வி வளர்ச்சி, சாமானிய மக்களின் கல்விக்கு அளித்த முக்கியத்துவம், தமிழ் இசைச் சங்கம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், கட்டுமானத் துறை உள்ளிட்ட துறைகளில் அவரது சாதனைகள் குறித்து பாராட்டு.

அவரது பேரப்பிள்ளைகள் ஆத்தங்குடியில் 114 ஆண்டுகால கல்விப் பணியாற்றும் நேரு நடுநிலைப் பள்ளியில் நகர்ப்புற மாணவர்களுக்கு இணையான கல்விச் சூழலை உருவாக்கியது பாராட்டிற்குரியது. கல்விதான் அவசியம்; அவசரம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

### சிறப்பு உரைகள்!

- தமிழக அரசின் தொடக்கக்கல்வி இயக்குநர் டாக்டர் பி.ஏ. நரேஷ், கல்வித்துறை உயர் அதிகாரி செந்தில்குமார், தலைமை ஆசிரியர் தனவெட்சுமி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

### பங்கேற்ற முக்கியஸ்தர்கள்

கீழ்வீடு நாச்சியப்பன், டைகர் சுப்பிரமணியன், சூரியவில் நாச்சியப்பன், ரமேஷ், அரசு நாச்சியப்பன், ஏ.ஆர். மணி, ஏ.எல். சிவப்பிரகாசம் என்ற ராமு, கோனாப்பட்டு லெட்சுமணன், லாலா நாச்சியப்பன், ஆத்தங்குடி பெருமாள் மற்றும் பலர்.

அனைவருக்கும் சிறப்பான மதிய உணவு வழங்கப்பட்டது.

பள்ளிச் செயலாளர் சொ. சுப்பிரமணியன் நன்றி கூறினார்.

கல்விதான் ஒரு மனிதனுக்கு அவசியம்... அவசரம்!

விழா ஏற்பாடுகளை டாக்டர் ஏ.ஆர்.ஆர். ஆறுமுகம், ஏ.ஆர்.ஆர். ரரஜேந்திரன், ஏ.ஆர்.ஆர். வெங்கடாசலம் தம்பதியார், மகள் வசந்தா தம்பதியார் மற்றும் பேரப் பிள்ளைகள் சிறப்பாக செய்திருந்தனர்.

# வேலை வாய்ப்பு

## எஸ்பிஐ வங்கியில் 1,538 இளநிலை உதவியாளர் பணிகள்!

ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா (SBI) வங்கியில் Junior Associate (Customer Support & Sales) பணிகளுக்கான சிறப்பு ஆட்சேர்ப்பு அறிவிப்பு வெளியாகியுள்ளது. SC/ST/OBC பிரிவுகளில் நிலுவையில் உள்ள காலியிடங்கள் நிரப்பப்பட உள்ளன. மொத்தம் 1,538 பணியிடங்கள் உள்ளன.

**நிறுவனம்:** ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா (SBI)

**பணி:** Junior Associate Customer Support & Sales

**காலியிடங்கள்:** 1,538

**பணியிடம்:** இந்தியா முழுவதும்

**பணி தன்மை:** நிரந்தரப் பணி

**கல்வித்தகுதி:** அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஏதேனும் ஒரு பிரிவில் பட்டப்படிப்பு.

**வயது வரம்பு:** 01.04.2026 அன்று 20 முதல் 28 வயது வரை. SC/ST, OBC உள்ளிட்ட பிரிவினருக்கு விதிமுறைகளின்படி வயது தளர்வு வழங்கப்படும்.

**சம்பளம்:** ஆரம்ப அடிப்படை ஊதியம் ரூ.26,730. மும்பை போன்ற பெருநகரங்களில் தற்போதைய சலுகைகளுடன் தொடக்க மொத்த ஊதியம் சுமார் ரூ.46,000 மாதம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தேர்வு முறை:**

முதல்நிலைத் தேர்வு முதன்மைத் தேர்வு உள்ளூர் மொழித் திறன் தேர்வு.

**விண்ணப்ப தொடக்கம்:** 07.08.2026

**கடைசி நாள்:** 27.08.2026

**விண்ணப்பிக்கும் முறை:** ஆன்லைன்

**விண்ணப்பக் கட்டணம்:** SC/ST/PwBD/முன்னாள் ராணுவத்தினருக்கு கட்டணம் இல்லை. OBC பிரிவினருக்கு ரூ.750.

**தமிழ்நாடு:** தமிழ்நாட்டிற்கான 65 SC காலியிடங்கள் உள்ளன. தேர்வு மொழிகளில் தமிழ் இடம்பெற்றுள்ளது.

**விண்ணப்பம்:** SBI அதிகாரப்பூர்வ Career இணையதளம் – https://sbi.bank.in/

**குறிப்பு:** விண்ணப்பிக்கும் முன் SBI வெளியிட்டுள்ள அதிகாரப்பூர்வ அறிவிப்பில் கல்வித்தகுதி, வயது, இடஒதுக்கீடு மற்றும் பிற விதிமுறைகளை முழுமையாக சரிபார்க்கவும்.

# அதிமுகவில் இருந்து விலகியவர்களுக்கு புதிய பொறுப்பு!




சென்னை, ஆக. 09–

அதிமுகவில் இருந்து விலகி தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்த முன்னாள் அமைச்சர்கள் சி. விஜயபாஸ்கர், எம்.ஆர். விஜயபாஸ்கர், இசக்கி சுப்பையா உள்ளிட்டோருக்கு புதிய பதவிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. தவெக தலைவர் விஜய் வெளியிட்ட அறிவிப்பில், கட்சியின் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில் மாவட்ட அமைப்புச் செயலாளர்கள் மற்றும் துணைப் பொதுச் செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மாவட்ட அமைப்புச் செயலாளர்கள்:**

சி. விஜயபாஸ்கர் புதுக்கோட்டை

எம்.ஆர். விஜயபாஸ்கர் கரூர்

இசக்கி சுப்பையா தென்காசி

மேலும் கே. மரகதம் குமரவேல், எஸ். ராஜகோபால், எச். ஜாகீர் உசேன், வி. குமார், எஸ். யுவராஜ், சி.வி. தினகரன், கே. மணிகண்டன், ஆர்.எஸ். மணிகண்டன், கே. அருள்ராஜ், எஸ்.டி.ஆர். சாமுவேல் ராஜ் உள்ளிட்டோருக்கும் பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

புதிய நிர்வாகிகள் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட நிர்வாகிகளுடன் இணைந்து, பொதுச் செயலாளர் என். ஆனந்த்வழிகாட்டுதலின்படி கட்சிப் பணிகளை மேற்கொள்வார்கள் என விஜய் தெரிவித்துள்ளார்.

குறிப்பு: நீங்கள் வழங்கிய மூலச் செய்தியில் “11 பேருக்கு” எனக் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், பட்டியலில் 12 பெயர்கள் இடம்பெற்றுள்ளன. மேலும் எம்.ஆர். விஜயபாஸ்கரின் பெயர் இரண்டு பொறுப்புகளிலும் வருகிறது.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்




★ மாநில நலனுக்காக ஒற்றுமை – அனைத்து கட்சிகளையும் ஒன்றிணைக்கிறார் முதல்வர்!

## கொசோவோ நாட்டு பிரதமர் மீது முட்டை வீச்சு; நாடாளுமன்றத்தில் பரபரப்பு!



கொசேவோ, ஆக. 09–

கொசேவோ நாட்டின் நாடாளுமன்ற கூட்டத்தொடரின் போது இடைக்கால பிரதமராக பதவியேற்றுள்ள அல்பின் குர்தி மீது எதிர்க்கட்சி எம்பி முட்டை வீசிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கொசேவோ நாட்டின் நாடாளுமன்ற கூட்டத்தொடர் ஜூன் மாத தேர்தலுக்கு பிறகு கூடியது. அதனை தொடர்ந்து நாடாளுமன்ற கூட்டத்தொடர் நடந்து கொண்டிருந்தபோது நாட்டின் ஜனாதிபதியை தேர்ந்தெடுக்க கூடுதல் அவகாசம் தேவை என்றும், இதுகுறித்து நடவடிக்கையில் எதிர்கட்சிகளுடன் அரசு கலந்தாலோசிக்க வேண்டும் என்றும் தற்காலிக பிரதமர் வேண்டுகோள் விடுத்ததை அடுத்து சலசலப்பு ஏற்பட்டது,

இதனை தொடர்ந்து அலையன்ஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டைம் காத்ரிஜாஜ் தன்னுடைய பள்ளியில் வைத்திருந்த பழுப்பு நிற முட்டைகளை துக்கி அவர் மீது வீசத் தொடங்கினார்.

முட்டைகள் வீசியதோடு, தற்காலிக பிரதமரை நோக்கி "அவமானம், அவமானம்" என எதிர்க்கட்சியை சேர்ந்த ஒரு பெண் கூறினார்.

உடனடியாக இதில் தலையீட்டு சக எம்பி–களும், நாடாளுமன்ற பாதுகாப்பு பணியாளர்களும் அந்த பெண்ணை அங்கிருந்து அப்புறப்படுத்தினர்.இந்த எதிர்பாராத சம்பவம் காரணமாக நாடாளுமன்ற நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

சபாநாயகர் பதவிக்கான வேட்பாளரை முன்மொழிவதற்கு முன்னதாக, எதிர்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த கூடுதல் அவகாசம் தேவை என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்ட நிலையில், எதிர்க்கட்சி உறுப்பினரின் செயலால் நாடாளுமன்றம் பரபரப்பானது.

## செப்டம்பர் 1 முதல் கோவில்களுக்குள் செல்போன் எடுத்து செல்ல தடை!



திருச்சி, ஆக. 09–

திருச்சியில் உள்ள திருவரங்கத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்ரமேஷ் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறுகையில்:–

நிர்வாக ரீதியில் மாவட்ட ஆட்சியர் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகளும் சிறப்பாக செயல்பட்டு, கோபுரம் திறப்பு இன்று நடத்தப்பட்டுள்ளது.

தற்போழுது இருக்கக்கூடிய நிலம் தொடர்பான பிரச்சனைகள் அனைத்தும் அறக்கட்டளையின் கீழ் அல்லது அந்த அறக்கட்டளையை நிர்வகிக்கும் நபர்களின் பெயர்களில் இருக்ககூடிய நிலங்களாக உள்ளது. அந்த நிலத்தை என்ன பயன்பாட்டிற்காக முன்னோர்கள் அவர்களிடம் கொடுத்தார்கள் என்று பார்க்கும்போது, கோவில்களுக்கு தர்ம காரியங்கள் செய்வதற்காக கொடுக்கப்பட்டுள்ளது. அதிக இடங்களில் கோவில் நிலம் கொடுக்கப்பட்டதற்கான நோக்கத்தை மறைத்துவிட்டு, அறநிலையத்துறையின் கவனத்திற்கு வராமல் முறைகேடான பத்திரப்பதிவுகளில் சில பேர் ஈடுபடுகின்றனர்.

இந்த விவகாரங்கள் குறித்து எங்களுக்கு தகவல் தெரிந்தவுடன் நிர்வாக ரீதியாகவும், சட்ட ரீதியாகவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

எந்தவொரு காலத்திலும் இதுபோன்ற கோவில் சொத்துகளும் மற்றும் அறக்கட்டளைக்கு கொடுக்கப்பட்ட சொத்துக்களும், அதன் உரிய நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்படும்.

பழனியில் எவ்வாறு நீதிமன்றத்தின் ஒரு மறுப்பு ஆணையை வைத்துக்கொண்டு, அந்த இடத்தை பத்திரப்பதிவு செய்தார்களோ, அந்த மாதிரியான விஷயங்கள் தான் இங்கு நடந்து கொண்டிருக்கிறது.

மேலும் பழனி கோவில் குறித்தான வழக்கு நீதிமன்றத்திற்கு வந்தபோது, "ஏற்கனவே இவர்கள் தனி நீதிபதியையும், நீதிமன்றத்தையும் ஏமாற்றி, இதுபோன்ற ஒரு ஆணையை பெற்றுள்ளனர்" என்று நீதிமன்றமே கூறியுள்ளது.

கடந்த கால ஆட்சியில் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில், அறக்கட்டளைக்கு சொந்தமான ஒரு இடத்தை தனி நபர்கள் பெயர் மாற்றம் செய்தனர்.

இந்த வழக்கு குறித்து, கடந்த ஐந்து வருடங்களாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆனால் இன்று நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன், கோவில் மோசடியில் ஈடுபட்ட 19 பேர் மீது காவல் நிலையத்தில் எஃப்.ஐ.ஆர் பதிவு செய்யப்பட்டு, கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே கோவில்களுக்குள் மொபைல்போன்களை அனுமதிக்க கூடாது என நீதிமன்ற உத்தரவு போடப்பட்டுள்ளது. ஆனால் எதுவும் கடைபிடிக்கப்படாமல் இருந்தது.

எனவே செப்டம்பர் 1–க்குள் முதல் நிலை கோவில்கள் அனைத்திலும், மொபைல் கவுண்டர்கள் அமைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. இதன்மூலம் பொதுமக்கள் கோவில்களுக்குள் மொபைல் போன்கள் எடுத்து செல்வது தடுத்து நிறுத்தப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.



திருப்பத்தூர் மாவட்டம், மாதனூர் ஊராட்சி ஒன்றியம், நாயக்கனேரி ஊராட்சி பகுதியில் அமைந்துள்ள அங்கன்வாடி மையத்தில் உள்ள சமையலறையில், உணவு தயாரிக்கப்படும் முறைகள், சமையலறையின் தூய்மை மற்றும் பாதுகாப்பு வசதிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திட்ட இயக்குநர் சௌ.தமிழரசி மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

## விடுமுறை தினம்: குற்றால அருவிகளில் சுற்றுலா பயணிகள் உற்சாக குளியல்!



தென்காசி, ஆக. 09–

விடுமுறை என்பதால் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் குற்றாலத்தில் குவிந்தனர். ஐந்தருவி, மெயின் அருவி பழைய குற்றால அருவிகளில் நீண்ட வரிசையில் நின்று குளித்து மகிழ்ந்தனர்.

குற்றாலம் மற்றும் அதனை ஒட்டி உள்ள பகுதிகளில் விட்டு விட்டு சாரல் மழை பெய்தது. இதனால் 'குளுகுளு' சூழலை அனுபவித்தவாறு சுற்றுலா பயணிகள் அருவிகளில் உற்சாகமாக குளியல் போட்டனர்.

அருவிகளில் குளித்த சுற்றுலா பயணிகள் அருவிக்கரை பகுதியில் உள்ள கடைகளில் தேநீர், தின்பண்டங்களை வாங்கி ருசித்தனர். இதனால் கடைகளிலும் வியாபாரம் சூடுபிடித்ததால் வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## சென்னை கடற்கரைகளில் செப்டம்பர் முதல் இலவச வைபை!



சென்னை, ஆக. 09–

மெரினா, பெசன்ட் நகர், திருவான்மியூர், திருவொற்றியூர் கடற்கரைகளில் வரும் செப்டம்பர் முதல் இலவச வைபை சேவை வழங்க மாநகராட்சி திட்டமிட்டுள்ளது.

மொத்தம் 107 புதிய ஸ்மார்ட் போல்கள் அமைக்கப்பட உள்ளன. இதன்மூலம் பொதுமக்கள் தினமும் 45 நிமிடங்கள் இலவச இணையத்தை பயன்படுத்தலாம்.

மெரினாவில் 75, பெசன்ட் நகரில் 20, திருவான்மியூரில் 10, திருவொற்றியூரில் 7 போல்கள் அமைக்கப்படுகின்றன. இப்பணிகளுக்கு நிறுவனங்களின் CSR நிதி பயன்படுத்தப்படுகிறது.

ஏற்கெனவே உள்ள பொது வைபை சேவைகளில் இணைப்பு குறைபாடுகள் இருப்பதாக புகார்கள் உள்ளன. இதையடுத்து பூங்காக்கள், மருத்துவமனைகள் உள்ளிட்ட 900 இடங்களில் உள்ள 2,600 பழைய ஸ்மார்ட் போல்களையும் சீரமைக்க மாநகராட்சி திட்டமிட்டுள்ளது.

பொது வைபை பயன்படுத்தும்போது தனிநபர் தகவல்கள் கசிவதைத் தடுக்க சைபர் பாதுகாப்பு நடவடிக்கைகளையும்வலுப்படுத்த வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

## 'கல்' ட்ரோன்: ஆயுதச் சந்தையில் இந்தியாவின் புதிய சக்தி!



சென்னை, ஆக. 09–

உலகின் முன்னணி ஆயுத இறக்குமதி நாடாக இருந்த இந்தியா, தற்போது பாதுகாப்புத் தளவாடங்களை ஏற்றுமதி செய்யும் நாடாக வளர்ந்துள்ளது. 2025–26 நிதியாண்டில் இந்தியாவின் பாதுகாப்புத் துறை ஏற்றுமதி ரூ.38,424 கோடியாக உயர்ந்துள்ளது. இது முந்தைய ஆண்டைவிட 62.66% அதிகம். இந்த வளர்ச்சிக்கு பிரம்மோஸ் ஏவுகணையின் வெற்றி முக்கிய காரணமாக உள்ளது. அடுத்ததாக, ஒடிசாவைச் சேர்ந்த ஐஜி டிஃபென்ஸ் நிறுவனம் தயாரித்துள்ள நீண்ட தொலைவு தாக்குதல் திறன் கொண்ட 'கல்' (KAL) ட்ரோன் முக்கிய ஏற்றுமதி ஆயுதமாக உருவெடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

'கல்' தற்கொலைப்படை வகை ஆளில்லா தாக்குதல் விமானமாகும். இது 1,000 கி.மீ. வரை சென்று தாக்கும் திறன், 7 முதல் 8 மணி நேரம் பறக்கும் திறன், மணிக்கு 160 முதல் 200 கி.மீ. வேகம், 50 கிலோ வரை வெடிபொருட்களை சுமக்கும் திறன் மற்றும் சுமார் 5,000 மீட்டர் உயரத்தில் பறக்கும் திறன் கொண்டது. மேம்பட்ட நேவிகேஷன் தொழில்நுட்பம் மூலம் இலக்கை நோக்கி தானாகச் செல்லும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

ரேடார் தளங்கள், வான் பாதுகாப்பு அமைப்புகள் உள்ளிட்ட முக்கிய இலக்குகளைத் தாக்கும் திறன் கொண்டதாக நிறுவனம் தெரிவித்துள்ளது. வளைகுடா மற்றும் கிழக்கு ஆசிய நாடுகள் 'கல்' ட்ரோனை வாங்க ஆர்வம் காட்டி வருகின்றன. ஏற்றுமதி மத்திய அரசின் ஒப்புதல் மற்றும் அனுமதிக்குப் பிறகே நடைபெறும்.

இதற்கிடையே, இந்தியாவின் பிரம்மோஸ் ஏவுகணைக்கு பிலிப்பைன்ஸ், வியட்நாம், இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகள் ஒப்பந்தம் செய்துள்ளன. மேலும் பல நாடுகள் வாங்க ஆர்வம் தெரிவித்துள்ளன.

இந்தியா தற்போது 80–க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு பாதுகாப்புத் தளவாடங்களை ஏற்றுமதி செய்கிறது. பிரம்மோஸ், பினாகா, ஸ்வாதி ரேடார், ஆகாஷ், துருவ் ஹெலிகாப்டர் உள்ளிட்டவை ஏற்றுமதியாகின்றன.

2029–30–க்குள் பாதுகாப்புத் தளவாட ஏற்றுமதியை ரூ.50,000 கோடியாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், 'கல்' ட்ரோன் இந்தியாவின் ஆயுத ஏற்றுமதிக்கு புதிய உச்சத்தை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஜந்தர் மந்தர் போராட்டக் களம் மாறுமா?




புதுடெல்லி, ஆக. 09–

எளிய மக்கள், மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் போராட்டக் களமாக 30 ஆண்டுகளுக்கும் மேலாக விளங்கி வரும் ஜந்தர் மந்தர், விரைவில் வேறு இடத்திற்கு மாற்றப்படலாம் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

சமீபத்தில் நீட் வினாத்தாள் கசிவைக் கண்டித்து டெல்லி ஜந்தர் மந்தரில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் திரண்டு போராட்டம் நடத்தினர். பின்னர் போராட்டக்காரர்கள் நாடாளுமன்றத்தை நோக்கி பேரணியாகச் சென்றது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்நிலையில், ஜந்தர் மந்தருக்குப் பதிலாக ராம் லீலா மைதானத்தை போராட்டங்களுக்கான புதிய இடமாக மாற்றுவது குறித்து ஆலோசனை நடைபெறுவதாக கூறப்படுகிறது.

1988 முதல் ஜந்தர் மந்தர் மக்கள் போராட்டங்களின் முக்கிய மையமாக இருந்து வருகிறது. சாதாரண மக்களின் பிரச்சினைகள், மாணவர்களின் எதிர்காலம், சமூக மற்றும் அரசியல் கோரிக்கைகள் என பல்வேறு போராட்டங்கள் இங்கு நடைபெற்றுள்ளன.

நாடாளுமன்றத்திலிருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் இருப்பதால், இங்கு நடைபெறும் போராட்டங்கள் மத்திய அரசின் கவனத்தை உடனடியாக ஈர்த்து வந்தன. இந்த நிலையில், போராட்டக் களம் மாற்றப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

## மதுரை ஆவினில் ரூ.30 லட்சம் முறைகேடு புகார்!




மதுரை, ஆக. 09–

மதுரை ஆவினில் பால் பொருட்கள் விற்பனைத் தொகையை முறையாக வரவு வைக்காமல் ரூ.30 லட்சம் முறைகேடு நடந்ததாக புகார் எழுந்துள்ளது. ஆரப்பாளையத்தில் ரூ.21 லட்சம், பி.பி. குளத்தில் ரூ.7.5 லட்சம், பழங்காநத்தத்தில் ரூ.7 லட்சம் முறைகேடு நடந்ததாக கூறப்படுகிறது.

இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட கண்காணிப்பாளர்களிடம் விசாரணை நடைபெற்று வருகிறது. ஆவின் மேலாளர் தலைமையில் ஊழியர்களிடம் விசாரணை நடக்கிறது. முறைகேடு உறுதியானால் நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## குன்னத்தூர் ரியல் பிட்னஸ் பிளாக் ஸ்குவாட் அணி அபார வெற்றி!




திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் அமெச்சூர் பவர் லிப்டிங் அசோசியேஷன் மற்றும் வி ஜே பிட்னஸ் சார்பில் நடைபெற்ற தென்னிந்திய அளவிலான பளு தூக்கும் போட்டியில் தமிழ்நாடு ஆந்திரா கேரளா கர்நாடகா போன்ற பல மாநிலங்களில் இருந்து சுமார் 600 போட்டியாளர்கள் கலந்து கொண்டனர் இந்த போட்டியில் குன்னத்துரைச் சார்ந்த ரியல் பிட்னஸ் பிளாக் ஸ்குவாட் அணியினர் அதிக பதக்கங்களை பெற்று டீம் சாம்பியன் பட்டத்தையும் வென்றனர் வெற்றி பெற்ற அணியினருக்கு பயிற்சியாளர் திரு சிவராமகிருஷ்ணன் பாராட்டுகளை தெரிவித்தார் மேலும் டீம் சாம்பியன் கோப்பையை பயிற்சியாளர் சிவராமகிருஷ்ணனிடம் கொடுத்து விளையாட்டு வீரர்கள் புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.



## பொது அறிவிப்பு

தேனி மாவட்டம், தேனி வட்டம், தேனி அல்லிநகரம் நகராட்சி, தேனியில்,பொம்மையகவுண்டன்பட்டி, கதவு எண் 459/1, டெலிபோன் நகர் என்ற முகவரில் வசித்து வரும் திரு. தொட்டுசாமி கவுண்டர் அவர்களின் குமாரர் திரு.T. ராஜாராம் (ஆதார் எண்: 3093 1915 7786) அவர்களின் தகவலின் பேரில் கொடுக்கலான போது அறிவிப்பு,

எமது கட்சிக்காரர் கடந்த 30.07.2026 ல் தேதி காலை சுமார் 11 மணியளவில் என்னுடைய ( parent document) தாய் அசல் காலிமனையிடம் கிரய பத்திரத்தை–தேனி மாவட்டம், தேனி வட்டம், தேனி அல்லிநகரம் நகராட்சி , பொம்மைகாவுடன்பட்டியில் இருந்து ஊஞ்சாம்பட்டிகு வண்டியில் செல்லும் போது தொலைந்துவிட்டது.மேற்படி எமது கட்சிக்காரர் (parent documents) தாய் அசல் காலிமனையிடம் கிரய பத்திரத்தை பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யபட்டவை. தேனி SRO No. 1/111/1983 ஆகும். ஆகவே எமது கட்சிக்காரர் (parent document) தாய் அசல் காலிமனையிடம் கிரய பத்திரம் பதிவு செய்த ஆவணம் தொலைந்துவிட்டது.தொலைந்து போன மேற்சொன்ன ஆவணம் கிடை க்கபெற்றால் எமக்கோ, அல்லது எமது கட்சிக்காரருக்கோ தகவல் கொடுக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

முகவரி

**G.P.காளியப்பன், B.A.,BL.,**

வழக்கறிஞர் நோட்டரி பப்ளிக்

D.no: 424 , 5w சத்திரப்பட்டி ரோட்,

doctors avenue aranmanaipudhur,

தேனி வட்டம், தேனி– 625531

போன் : 98421 69689.


Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020